தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஹேவிளம்பி, ஆனி 27, திருவள்ளுவர் ஆண்டு–2048

2017 ஜூலை 11, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“பகுத்துஉண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்

தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.”

கிடைத்த உணவைப் பலருக்கும் கொடுத்துத் தானும் உண்டு, அனைத்து உயிர்களையும் காப்பாற்றுதல், நீதிநூல்கள் கூறுகின்ற அறங்கள் அனைத்திலும் மிக உயர்ந்ததாகும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 171, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன், மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

171—

புதிய வகுப்பறைக் கட்டடம்

***20683—திரு. கே.ஏ. பாண்டியன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், தில்லைவிடங்கன் ஊராட்சி நடுநிலைப் பள்ளிக்குப் புதிய வகுப்பறைக் கட்டடங்கள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், சிதம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பரங்கிப்பேட்டை ஒன்றியம், தில்லைவிடங்கன் ஊராட்சி நடுநிலைப் பள்ளியில் மொத்தம் 5 கட்டடங்கள் உள்ளன. இந்த 5 கட்டடங்களில், மொத்தம் 9 வகுப்பறைகள் உள்ளன. இவற்றில் 4 வகுப்பறைகள் பழுதடைந்த நிலையில் உள்ளன. இப்பழுதடைந்த கட்டடங்களை அகற்றிவிட்டு, அதே இடத்தில் புதிய கட்டடங்களைக் கட்டுவதற்கு அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன் அவர்கள்.

திரு. கே.ஏ. பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னலம் மறந்து தமிழர் நலத்தையே நினைத்து, தமிழக மக்களுக்காகத் தம் வாழ்வை அர்ப்பணித்த எங்கள் அற்புதத் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) உழைப்பவருக்கு வேலை, பசித்தவருக்கு உணவு, படிப்பவருக்குத் தரமான கல்வி, பிணி தீர்க்க மருத்துவம், திருமணத்திற்குத் தாலிக்குத் தங்கம் என்று, தமிழக மக்களுக்காக எண்ணற்ற பல திட்டங்களை, மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக வழங்கிவிட்டு, இன்று வங்கக் கடலோரம் துயில்கொள்ளும் எங்கள் சாதனைத் தாய், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். சூழ்ச்சிகள் பல வந்தாலும், அவை அனைத்தையும் தூள் தூளாக்குகின்ற துணிச்சல்மிக்க எங்கள் மாண்புமிகு முதல்வர், (மேசையைத் தட்டும் ஒலி) கொங்கு சீமை தந்த எங்களின் கொள்கை சீமான், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களைப் பணிவோடு வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சிதம்பரம் தொகுதிக்குட்பட்ட பரங்கிப்பேட்டை ஒன்றியம், தில்லைவிடங்கன் ஊராட்சியில் செயல்பட்டுவரும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 150 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர். இப்பள்ளிக் கட்டடம், சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டது. இப்பள்ளிக் கட்டடத்தை இடிக்க

வேண்டுமென்று அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் அவர்கள் மனு அளித்து, அந்த மனுகூட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்தில் உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி, உடனடியாக அந்தக் கட்டடத்தை இடித்துவிட்டுப் புதிதாக ஒரு கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களது கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தில் இந்த ஆண்டே உடனடியாக அந்தப் பழைய கட்டடத்தை இடித்துவிட்டுப் புதிய கட்டடங்களைக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளயிருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன் அவர்கள்.*

திரு. கே.ஏ. பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல பதிலைத் தந்திருக்கின்ற மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கு என்னுடைய நன்றியை இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அதுதான் நன்றி சொல்லி முடித்துவிட்டீர்கள். உட்காருங்கள்.*

திரு. கே.ஏ. பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரே ஒரு கேள்வி இருக்கிறது. எனது தொகுதியான சிதம்பரம் நகரில், 55 ஆண்டுகளுக்கும் மேலாக கிளை நூலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்குச் சொந்தக் கட்டடம் இல்லை. நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு சிதம்பரம் நகராட்சிமூலம், போதிய இடம் தேர்வு செய்து வழங்கப்பட்டுள்ளது. அந்த இடத்தில், நூலகம் கட்டுவதற்கு*

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்குவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகங்களைப் பொறுத்தவரையில், பள்ளிக் கல்வித் துறையின் மானியக் கோரிக்கையில் அரசினால் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சிதம்பரம் நகராட்சியில் இடம் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். நிதி நெருக்கடி இருக்கின்ற காரணத்தால், இந்த ஆண்டே அதைக் கட்ட வேண்டும் என்று சொன்னால், அவருடைய நிதியிலிருந்து கட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளலாம். இல்லையென்றால், அடுத்த ஆண்டு அந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. இராமச்சந்திரன் அவர்கள்.

முற்பகல் 10—05

திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்கும் தெய்வம் அம்மா இவ்வுலகில் இல்லை. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆத்மா நம்மோடுதான் இருக்கிறது என்பதை நான் உணருகிறேன். காரணம், இந்த சட்டமன்றம் முதல் போயஸ் இல்லம் தொடர்ந்து, கொடநாடு எஸ்டேட் வரை யார், யாரை எங்கெங்கு அனுப்ப வேண்டுமோ, அவர்களையெல்லாம் அங்கங்கு அனுப்பி, தாயே, நீங்கள் எங்களோடு இருக்கிறீர்கள் என்பதை நான் உணர்கிறேன். தாய் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.

எனது குன்னம் தொகுதி, செந்துறை ஒன்றியம், முள்ளுக்குறிச்சியிலுள்ள உயர்நிலைப் பள்ளியில் 250 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர். 10 ஆம் வகுப்பிற்குப் பிறகு, அந்த மாணவ, மாணவியர் தங்களுடைய மேல்நிலைக் கல்வியை தொடர்வதற்காக 20 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள

2017 ஜூலை 11]

பள்ளிக்குச் செல்ல வேண்டியிருப்பதால், மாணவிகளின் படிப்பை பெற்றோர்கள் நிறுத்திவிடுகிறார்கள். நேற்றுக்கூட, செந்துறை ஒன்றியம், முள்ளுக்குறிச்சியில் அனைத்து மாணவர்களும் சாலை மறியலிலும் மற்றும் உண்ணாவிரதத்திலும் தங்களை ஈடுபடுத்தி, அவர்களுடைய கோரிக்கையை தெரியப்படுத்தியிருக்கிறார்கள். ஆகையால், முள்ளுக்குறிச்சி உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி, புதிய கட்டடம் கட்டித்தர மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், முள்ளுக்குறிச்சியில் மேல்நிலைப் பள்ளி அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். முள்ளுக்குறிச்சி முல்லை மலராக இந்த ஆண்டு மலரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் நகரிலே இருக்கின்ற பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 1,272 மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். அங்கே 10 ஆம் வகுப்பு வரை 1,000–க்கும் மேற்பட்ட மாணவியர் படித்து வருகின்றனர். காலை நேரத்திலே நடைபெறுகின்ற* prayer *கூட அந்தப் பள்ளியிலே இதுவரை நடைபெற்றதில்லை. அந்த அளவிற்கு இட நெருக்கடியான பள்ளி. அதேபோல, கழிப்பறை வசதி இல்லாமல் இருக்கின்ற பள்ளி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பள்ளியின் பழைய கட்டடங்களை இடித்துவிட்டு, அதற்குப் பதிலாக புதிய கட்டடங்களை கட்டித் தரவும், பள்ளியில் தினமும்* prayer *நடத்தி, அதில் அந்தப் பிள்ளைகள் கலந்துகொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தித் தரவும் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற ஆண்டில் புதிய கட்டடங்களை அமைப்பதற்காக அரசு நிதிகளை ஒதுக்குகின்றபொழுது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பள்ளியும் அதில் பரிசீலிக்கப்படும். அதேநேரத்தில், பல்வேறு இடங்களில் பள்ளிகளில் கழிப்பறை வசதிகள் இல்லையென்ற குறைபாட்டையும் மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இந்த ஆண்டு 10,000 கழிப்பறைகளை CSR நிதியிலிருந்து கட்டுவதற்கு பல்வேறு தொழிலதிபர்களை நாங்கள் சந்தித்துப் பேசியிருக்கிறோம். அதற்கான நடவடிக்கைகளை அரசு விரைந்து மேற்கொள்ளும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.*

திரு. அ. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமல் மக்கள் மனதிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். அவர்களுடைய வழியிலே நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன். பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், நாச்சிப்பாளையம் ஊராட்சி, நாச்சிப்பாளையம் கிராமத்திலே ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி செயல்பட்டு வருகின்றது. இந்த நடுநிலைப் பள்ளியிலே சுமார் 450 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். இந்தப் பள்ளியில் படிக்கின்ற மாணவ, மாணவியருக்குப் போதுமான இடவசதி இல்லை. ஏற்கெனவே இருந்த கட்டடம் பழுதடைந்திருந்ததால், அது இடிக்கப்பட்டுவிட்டது. ஆகவே, மாணவர்களுடைய கல்வி நலன் கருதி, நாச்சிப்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்குப் புதிய வகுப்பறைக் கட்டடம் கட்டித் தருவதற்கு, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

2017 ஜூலை 11]

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நாச்சிப்பாளையம் பள்ளியின் பழைய கட்டடம் இடிக்கப்பட்டதால், புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு புதிய கட்டடங்களைக் கட்டுகின்ற நிதியிலே அது இணைக்கப்படும். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, நீங்கள் ஒரு மூலக் கேள்வியும், 9 துணைக் கேள்விகளையும் இந்தக் கூட்டத் தொடரிலேயே கேட்டுவிட்டீர்கள். திரும்பவும் கை தூக்கிக் கொண்டிருந்தால், நான் என்ன செய்வது? உங்களுக்குப் பின்னால் இருக்கிற உறுப்பினர்களையும் நீங்கள் பார்க்க வேண்டும்.*

வினா வரிசை எண் 172, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

172—

சிப்காட் தொழிற்சாலை

***7176—திரு. பா. நீதிபதி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, சேடப்பட்டி பகுதியில் சிப்காட் தொழிற்சாலை அமைக்கும் பணியினைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சிப்காட் நிறுவனம் நேரடியாக எந்தத் தொழிற்சாலையையும் அமைப்பதில்லை. நிலங்களைக் கையகப்படுத்தி தொழில் தொடங்குவதற்கேற்ப, அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்பாடு செய்து, தொழில் வளாகங்களை உருவாக்கி சிப்காட் நிறுவனம் வழங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.